விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, புரட்டாசி - 1 வெள்ளி 17.09.2021 மலர் - 2, இதழ் - 164

# சேவாவின் சேவையை பாராட்டிய ஜோ பிடன்

உலகலாவிய தொண்டு அமைப்பான சேவா இன்டர்நேஷனல், அமெரிக்காவில் கொடிய கொரோனா தொற்றுநோய் காலங்களில் சமூகத்திற்கு மகத்தான சேவை செய்துள்ளது. மருத்துவக் கருவிகள், தடுப்பூசிகள், ஏழைகளுக்கு படுக்கைகள், உணவு வழங்குவது போன்ற சேவைகள் சேவ தொண்டர்களின் அன்றாட வாழ்வின் ஒரு அங்கமாகிவிட்டது. இன்றும்கூட, சேவா இன்டர்நேஷனல் அங்கு பலவிதமான சுகாதார விழிப்புணர்வு பணிகளை தொடர்ந்து செய்து வருகிறது.

சேவா இன்டர்நேஷனல் அமைப்பின் கொரோனா கால சீரிய சேவைகளைப் பாராட்டி, அமெரிக்க அதிபர் ஜோ பிடன் ஒரு பாராட்டு கடிதம் அனுப்பியுள்ளார். அதில், சேவா இண்டர்நேஷனலின் சேவையை அவர் வெகுவாக பாராட்டியுள்ளார்.

‘கடந்த ஆண்டு அமெரிக்க வரலாற்றில் மிகவும் வேதனையான வருடங்களில் ஒன்று. கொரோனா காரணமாக 6,28,000க்கும் அதிகமான அமெரிக்க உயிர்கள் இழக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், மக்கள் தடுப்பூசி போட உதவுவது உள்ளிட்ட உங்கள் முயற்சிகள் உயிர்களைக் காப்பாற்றுவது மட்டுமல்ல, வாழ்க்கையை மீட்டெடுக்கவும் உதவுகின்றன. முன் எப்போதையும் விட எங்களுக்கு உங்கள் தொடர் ஆதரவு தேவை. ஒரு தேசமாக ஒன்றிணைந்து, நாம் இந்த தொற்றுநோயை கடந்து, ஆரோக்கியமான, பயனுள்ள எதிர்காலத்தை உருவாக்க முடியும்’ என தெரிவித்துள்ளார்.

சேவா இன்டர்நேஷனல் அமைப்பு தனது டுவிட்டர் பதிவில், அதிபர் ஜோ பிடன், தங்களது சேவை முயற்சிகளை அங்கீகரித்ததற்கு நன்றி தெரிவித்துள்ளது. மேலும், ‘ஜோ பிடெனின் வார்த்தைகள் எங்கள் தன்னார்வலர்களை ஊக்குவிக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

விஜயபாரதம்






# நில அபகரிப்பில் தி.மு.க. எம்.எல்.ஏ


விஜயபாரதம்

திருப்பத்தூர் மாவட்டம், கதவாளம் பகுதியை சேர்ந்த 80 வயதான நந்தன் என்ற முதியவருக்கு அப்பகுதியில் 3 சென்ட் அளவிலான இடம் உள்ளது. அந்த இடத்தை ஆம்பூர் தி.மு.க சட்டமன்ற உறுப்பினரான வில்வநாதன், அந்த இடத்தை தரவேண்டும் என, 10 அடியாட்களை வைத்து மிரட்டி வந்துள்ளார். அவருக்கு வேறு இடத்தில் இடம் தருவதாக கூறி நிலத்தை அபகரித்து ஏமாற்றியும் உள்ளார். இது குறித்து காவல் நிலையத்தில் பலமுறை புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால், மனம் உடைந்த முதியவர், திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே, மண்ணெண்ணெயை ஊற்றித் தீக்குளித்தார். இதனைக் கண்ட பொதுமக்களும் காவலர்களும் தீயை அனைத்து, திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அவரை அனுப்பி வைத்தனர். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதனையடுத்து மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்டோர் விசாரணை செய்து வருகின்றனர். விசாரணையில், தி.மு.க எம்.எல். ஏவின் அடியாட்களான பாலாஜி, சிவா, செந்தில் சாமிநாதன் உள்ளிட்ட பலரின் பெயர்களைத் தெரிவித்துள்ளார் நந்தன்.

# அயோத்தி ஸ்ரீராமர் உற்சவ மூர்த்தி


விஜயபாரதம்

அயோத்தி, ஸ்ரீராம ஜென்மபூமியில் அமையவுள்ள பிரமாண்டமான ஸ்ரீராமர் கோயிலின் கட்டுமானப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இந்த ராமர் கோயிலுக்காக உற்சவ மூர்த்திகளான ராமர், சீதை, லட்சுமணர், ஆஞ்சநேயர் உற்சவ விக்கிரகங்கள் பஞ்சலோகத்தால் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த சிலைகள், ஹிந்து பரிரக்ஷண சமிதியின் சார்பில் தமிழகத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த விக்ரகங்களுக்கு, முதல் முறையாக சென்னை, தி.நகரில் உள்ள திருமலை திருப்பதி தேவஸ்தான வேங்கடேச பெருமாள் கோயிலில், 16 புண்ணிய நதிகளின் நீருடன் சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டன. கோயில் அரங்கில் பொதுமக்கள் தரிசனத்துக்காக இந்த உற்சவ மூர்த்திகள் வைக்கப்பட்டன. ஏராளமான பக்தர்கள் ஸ்ரீராமருக்கு நாம சங்கீர்த்தனம், பஜனைகளை நடத்தி வழிபாடு செய்தனர். இந்த உற்சவர் சிலைகள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு பயணிக்க உள்ளன. அயோத்தி ராமர் கோயில் கும்பாபிஷேகத்தின்போது இவை கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படும் என ஹிந்து பரிரக்ஷண சமிதி அமைப்பினர் தெரிவித்தனர்.

# கோயில் நிலத்தை அபகரித்தால் குண்டாஸ்

சென்னை மயிலாப்பூர் பேயாழ்வார் தேவஸ்தான கோயில் அறங்காவலர் ஸ்ரீதரனை தற்காலிகமாக நீக்கப்பட்டதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், கோயில் நிலத்தை அபகரித்தவர்கள் மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும். நிலத்தை ஆக்கிரமித்தவர்கள், தாமாக முன்வந்து ஹிந்து சமய அறநிலையத்துறையிடம் ஒப்படைக்க ஏதுவாக விளம்பரம் வெளியிட வேண்டும். கோயில் நிலம், சொத்து, நகையை மீட்கும் நடவடிக்கையை கண்காணிக்க சிறப்பு பிரிவை ஏற்படுத்த வேண்டும். சிறப்பு பிரிவுக்கான தொலைபேசி, மொபைல் எண்களை கோயில்கள் மற்றும் அலுவலகங்களில் வைக்க வேண்டும் என உத்தரவு பிறப்பித்தது. மேலும் ஸ்ரீதரன் நீக்கத்தையும் ரத்து செய்யவும் அதே சமயம் அதிகாரிகள் தொடர்ந்து விசாரிக்கவும் உத்தரவிட்டுள்ளது.



விஜயபாரதம்


# தற்கொலை தீர்வல்ல

தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை தனது அறிக்கையில் மாணவ மாணவியருக்கு சில அறிவுரைகள் வழங்கியுள்ளார். அதில் அவர், 'மாணவர்களே உங்கள் கனவுகளை மேலும் விரிவாக்குங்கள். மருத்துவப் படிப்பில் இடம் கிடைக்காவிட்டால் உலகம் ஒன்றும் இருண்டுவிடப் போவதில்லை. விடாமுயற்சியும் திறமையும் இருந்தால் ஏழைக்கும் வெற்றி நிச்சயம். தற்கொலைக்கு துாண்டும் சில பொய்யான பரப்புரைகளை நம்பி விலைமதிப்பற்ற உங்கள் உயிரை இழக்க வேண்டாம். உங்களால் தேர்ச்சி பெற முடியாவிட்டால் உங்கள் பயிற்சி, தயாராகும் முறைகளில் மாற்றம் தேவைப்படுகிறது என்பதை உணர்ந்திடுங்கள். உங்களை நீங்களே நேசிக்கத் துவங்குங்கள். புத்தகங்களை வாசியுங்கள். பெரியவர்களிடம் பேசுங்கள், அவர்கள் அறிவுரைகளை கேட்டு நடந்திடுங்கள். தேர்வுகளை கடப்பது எப்படி என யோசிக்க வேண்டும். படிப்பின் மீது என்றும் பிடிப்போடு இருந்திடுங்கள். நாளைய உலகம் உங்களுடையது' என்று பல ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

விஜயபாரதம்



# ஐயப்பன் கோயில் நடை திறப்பு



விஜயபாரதம்

கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோயில் நடை, புரட்டாசி மாத பூஜைகளுக்காக, இன்று மாலை 5 மணிக்கு திறக்கப்படுகிறது. தந்திரி கண்டரரு மகேஷ் மோகனரு முன்னிலையில், மேல்சாந்தி ஜெயராஜ் போற்றி நடையை திறந்து வைக்கிறார். வரும் 21ம் தேதி வரை கோயிலில் பூஜைகள் நடைபெறுகின்றன. கொரோனா கட்டுப்பாடுகள் தளர்வுகள் காரணமாக தினசரி 15 ஆயிரம் பக்தர்கள், ஆன்லைன் முன்பதிவின்படி சுவாமி தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள். இதற்கான ஆன்லைன் முன்பதிவு கடந்த 8ம் தேதி தொடங்கியது. தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் 48 மணி நேரத்திற்குள் எடுக்கப்பட்ட ஆர்.டி.பி.சி.ஆர் நெகட்டிவ் சான்றிதழ் அல்லது கொரோனா தடுப்பூசி 2 டோஸ் போட்டதற்கான சான்றிதழ் கண்டிப்பாக கொண்டு வர வேண்டும். அது இல்லாத பக்தர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஐயப்ப பக்தர்களுக்கான மருத்துவச் சான்று, ஆன்லைன் சான்றிதழ் ஆய்வு நிலக்கல்லில் நடைபெறும்.

# டி.ஆர்.டி.ஓ. ஊழியர்கள் கைது

ஒடிசாவின் சந்திபூரில் உள்ள ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமான டி.ஆர்.டி.ஓவின் ஏவுகணைகள் உள்ளிட்ட பாதுகாப்புத் தளவாடங்களை சோதிக்கும் ஒருங்கிணைந்த சோதனை மையத்தில் (ஐ.டி.ஆர்) ஒப்பந்த ஊழியர்களாக பணிபுரிந்த நால்வரை ஒடிசா ஐ.ஜி ஹிமாசு லால் தலைமையிலான காவல்துறையின் சிறப்புக் குழு கைது செய்தது. முதற்கட்ட விசாரணையில் இந்த ஒப்பந்தப் பணியாளர்கள் சோதனை மையத்தின் செயல்பாடுகள் குறித்த தகவல்களை பாகிஸ்தான் உளவு அமைப்புடன் முகநூல், வாட்ஸ்ஆப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் வாயிலாக பகிர்ந்து கொண்டதும் அதற்காக பணம் பெற்றதும் உறுதி செய்யப்பட்டது. ‘அவர்களின் உரையாடல்கள், நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணித்த பின்னரே கைது செய்தோம். அந்த நால்வருடன் தொடர்புடைய மேலும் சிலரும் கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது’ என ஹிமாசு லால் தெரிவித்தார்.

விஜயபாரதம்



# கூகுள் பே நீதிமன்றம் நோட்டீஸ்

அபிஜித் மிஸ்ரா என்பவர் தாக்கல் செய்த பொது நல வழக்கில், 'இந்திய அரசியலமைப்பின் 21வது பிரிவை மீறும் விதமாக கூகுள் பே செயல்படுகிறது. கூகுளின் பாரத குடிமக்களின் ஆதார், வங்கி தகவல்களின் மீது, அங்கீகரிக்கப்படாத அணுகல், பயன்பாடு, தகவல் சேமிப்பு உள்ளிட்டவை கடுமையான சிக்கல்களை ஏற்படுத்தும். மத்திய அரசின் ஆதார் சட்டம், வங்கி ஒழுங்குமுறை சட்டம், பணப்பரிமாற்ற சட்டம் உள்ளிட்டவை அப்பட்டமாக மீறப்படுகின்றன' என தெரிவித்தார். வங்கிச் சட்டங்களின் கீழ் அங்கீகரிக்கப்படாத செயல்பாடுகள் குறித்த கூகுள் பேவுக்கு எதிரான இந்த மனு மீது இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (யு.ஐ.டி.ஏ.ஐ), ரிசர்வ் வங்கி, கூகுள் இந்தியா டிஜிட்டல் சர்வீசஸ் நிறுவனம் உள்ளிட்டவை பதில் அளிக்க வேண்டும் என்று டெல்லி உயர் நீதிமன்றம் கடந்த புதன்கிழமை நோட்டீஸ் அனுப்பியுள்ளது. இந்த வழக்கை நவம்பர் 8ம் தேதி விசாரணைக்கு நீதிமன்றம் பட்டியலிட்டுள்ளது.

விஜயபாரதம்

# பாதுகாப்புத்துறை அலுவலக வளாகம்

டெல்லி, கஸ்தூரிபாய் காந்தி மார்க் மற்றும் ஆப்பிரிக்க அவென்யூ பகுதியில் பாதுகாப்புத்துறைக்கான புதிய அலுவலக வளாகங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி, செப்டம்பர் 16ல் தொடங்கி வைத்தார். பின்னர் தரைப்படை, கடற்படை, விமானப்படை, சிவில் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். இதன் தொடக்க நிகழ்ச்சியில் பாதுகாப்புத்துறை அமைச்சர், இணையமைச்சர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரத்துறை அமைச்சர், பாதுகாப்புப் படை தலைமை தளபதி, முப்படை தளபதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். புதிய பாதுகாப்புத்துறை அலுவலக வளாகங்களில், தரைப்படை, கடற்படை, விமானப்படை உட்பட பாதுகாப்புத்துறை அமைச்சகத்தில் சுமார் 7,000 அதிகாரிகள் பணியாற்றுவர். இந்த வளாகம், நவீன, பாதுகாப்பான பணிச் சூழலை வழங்கும். கட்டட செயல்பாடுகளை நிர்வகிக்க, ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

விஜயபாரதம்



# டெலிகாம் நிறுவனங்களுக்கு ஆதரவு



விஜயபாரதம்

பாரதத்தை சேர்ந்த டெலிகாம் நிறுவனங்களைக் கடன் சுமை, நிலுவைத் தொகை பாதிப்பில் இருந்து காப்பாற்ற வேண்டும் என நோக்கத்தில் மத்திய தொலைத்தொடர்பு அமைச்சகம் பரிந்துரை செய்த முக்கியமான தளர்வு திட்டத்திற்கு மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்தது. இத்தளர்வு திட்டத்தில், டெலிகாம் நிறுவனங்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலுவை தொகையை, பங்குகளாக அரசுக்குச் செலுத்துவது உள்ளிட்ட பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. இதனால், இந்நிறுவனங்கள் அவற்றின் கடன், வட்டி சுமையில் இருந்து விடுபட்டு முன்னேறும். இத்துறையில், 100 சதவீத அன்னிய முதலீட்டுக்கும் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. டெலிகாம் நிறுவனங்களின் உரிமம் கட்டணம், ஸ்பெக்டரம் கட்டணம் மீதான வட்டி, அபராதத்தில் தளர்வு, வட்டிகள் அனைத்தும் மாதாந்திர அடிப்படையில் இல்லாமல் வருடாந்திர அடிப்படையில் கணக்கீடு செய்யப்படும் உள்ளிட்ட அறிவிப்புகளும் வெளியானது.

# உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை



விஜயபாரதம்

டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டத்தில், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத வாகன உற்பத்தியை ஊக்குவிக்கும் விதமாக ரூ. 26 ஆயிரம் கோடி ஒதுக்கப்படுகிறது. பேட்டரியில் இயங்கும் வாகனங்கள், ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் வாகனங்கள் உற்பத்திக்கு, உற்பத்தியுடன் இணைந்த ஊக்குவிப்பு சலுகைகள் அளிக்கப்படும். இதன் மூலம் 7.5 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். கரோனா பொதுமுடக்கத்தால் முடங்கியத் தொழில்களை மீட்டெடுத்து ஊக்குவிக்கும் நடவடிக்கையாக உற்பத்தியுடன் இணைந்த ஊக்குவிப்பு சலுகைகளை மத்திய அரசு அளித்து வருகிறது. கடந்த ஆண்டு ஆட்டோமொபைல், உதிரிபாக நிறுவனங்களுக்கு ரூ. 57,043 கோடி சலுகையை மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது. அதேபோல, இந்தாண்டு சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத வாகன உற்பத்தியை ஊக்குவிக்கும் விதமாக ரூ. 25,938 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2021 2022 நிதியாண்டில் உற்பத்தியுடன் இணைந்த ஊக்குவிப்பு சலுகைக்காக பட்ஜெட்டில், 13 துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.1.97 லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், டிரோன் தயாரிப்புத் தொழிலை ஊக்குவிக்க உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகையாக 26 ஆயிரம் கோடி அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஒரு விநாடிக்கு 4 ஸ்கூட்டர்கள்



விஜயபாரதம்

ஓலா எலக்ட்ரிக் நிறுவனம் தன் விற்பனையை ஆரம்பித்த ஒரே நாளில் ரூ. 600 கோர் மதிப்புள்ள மின்சார இருசக்கர வாகனங்களை விற்றுள்ளது. அதாவது ஒவ்வொரு வினாடியும் 4 ஸ்கூட்டர்கள் என்ற அளவில் இந்த விற்பனை இருந்துள்ளது. ஜூலை மாதம் இந்நிறுவனம் அறிவித்த மின்சார ஸ்கூட்டர் முன்பதிவு காலத்தில் முதல் 24 மணி நேரத்திற்குள் 1 லட்சம் முன்பதிவுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளது. இது உலகிலேயே அதிக முன்பதிவு செய்யப்பட்ட ஸ்கூட்டர் என்ற பெருமையை பெற்றுள்ளது. முன்பதிவு செய்தவர்களுக்கு வாகன டெலிவரி அக்டோபர் 2021 முதல் தொடங்கும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# விஷம் கக்கும் பத்திரிகை



விஜயபாரதம்

டைம் இதழ் ஒவ்வோர் ஆண்டும், உலகின் செல்வாக்கு மிகுந்த 100 பேரின் பட்டியலை வெளியிட்டு வருகிறது. அவ்வகையில் டைம் வெளியிட்டுள்ள 2021ம் ஆண்டின் செல்வாக்கு மிக்க 100 தலைவர்கள் பட்டியலில், பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் ஜோ பைடன், துணை அதிபர் கமலா ஹாரீஸ், சீன அதிபர் ஜிங்பிங், மேற்கு வங்க முதல்வர் மமதா, சீரம் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி பூனாவாலா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இதில், பிரதமர் மோடி குறித்து பத்திரிகையாளர் பரீத் ஜகாரியா எழுதியுள்ள கட்டுரையில், 'சுதந்திர பாரதத்தில், நேரு, இந்திராவுக்கு பின், மாபெரும் செல்வாக்கு பெற்ற தலைவராக நரேந்திர மோடி உள்ளார். எனினும், பாரதத்தில் மதச்சார்பின்மையிலிருந்து விலக வைத்து, ஹிந்து தேசியம் பக்கம் நெருங்க வைத்துள்ளார். பாரத முஸ்லிம்களின் உரிமைகளை பறித்துள்ளதுடன், பத்திரிகையாளர்கள் பலரையும் கைது செய்து சிறையில் அடைத்துள்ளார்' என, பொய்யாக எவ்வித ஆதாரமும் இல்லாத கருத்துகளை பதிவிட்டு தனது வன்மத்தை வெளிப்படுத்தி உள்ளார். டைம் இதழ் பிரதமர் மோடி, பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ் குறித்து என்றுமே உண்மையை பேசியது இல்லை. அப்படி பேசினாலும் அதில் விஷம் தோய்ந்த, உண்மைக்கு மாறான கருத்துகள்தான் இடம் பெற்றிருக்கும் என்பதற்கு இது மற்றொரு உதாரணம்.

# 2 ஆயிரம் கோடி வரி ஏய்ப்பு




விஜயபாரதம்

ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டம் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் இன்று நடைபெறுகிறது. இதில் சில முக்கிய அறிவிப்புகள் அறிவிக்கப்படலாம் என தெரிகிறது. பெட்ரோல், டீசல் உள்ளிட்ட பெட்ரோலிய தயாரிப்புகளின் விற்பனையைச் ஜி.எஸ்.டியின் கீழ் கொண்டுவரும் யோசனையும் முன்வைக்கப்படலாம். மேலும், பெரும்பாலான நடுத்தர ஓட்டல்கள் ஜி.எஸ்.டி வரியை வாடிக்கையாளர்களிடம் வசூலித்துவிட்டு அவற்றை அரசுக்கு கட்டுவது இல்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது. கடந்த நிதியாண்டில் மட்டும் ஓட்டல்கள் இவ்வகையில் ரூ. 2 ஆயிரம் கோடி வரையில் வரி ஏய்ப்பு செய்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாக தெரிகிறது. குறிப்பாக ஸ்விக்கி, சொமேட்டோ மூலம் விற்பனை செய்யப்பட்டதாகக் கூறி இந்த மோசடிகள் நடந்துள்ளது. எனவே ஓட்டல்களில் முறையாக வரி வசூல் செய்வதற்கு ஸ்விக்கி, சொமேட்டோ போன்ற ஆன்லைன் விநியோக நிறுவனங்களையும் ஜி.எஸ். டி வரியின் கீழ் கொண்டு வர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இன்றைய ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டத்தில் இது குறித்தும் முடிவு எடுக்கப்படலாம்.

---



# ஐ.எஸ்.ஐ.எஸ். தலைவன் கொலை

விஜயபாரதம்

சஹாராவில் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பின் தலைவன் அத்னன் அபு வாலித் அல் செஹ்ராவியை பிரான்ஸ் நாட்டின் ராணுவம் கொன்றதாக பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார். சஹாராவில் உள்ள சஹேலில் பயங்கரவாத குழுக்களுடன் நடைபெற்ற சண்டையில் இது பிரெஞ்சு ராணுவத்தின் மிகப்பெரிய வெற்றி என கூறிய பிரான்ஸ் அதிபர், இந்த ராணுவ நடவடிக்கைகள் நடைபெற்ற இடத்தை தெரிவிக்க மறுத்துவிட்டார். மேற்கு ஆப்பிரிக்காவின் சாஹல் பகுதியில் ஐ.எஸ்.ஐ.எஸ் தலைவராக இருந்த செஹ்ராவி, பல பயங்கரவாத செயல்களை நிகழ்த்தியவன். ஆகஸ்ட் 2020ல், செஹ்ராவி ஆறு பிரெஞ்சு பணியாளர்கள், அவர்களின் நைஜீரிய ஓட்டுனரை தூக்கிலிட்டான். இதனை நினைவுகூர்ந்த பிரான்ஸ் அதிபர், இறந்த அனைத்து மாவீரர்களை குறித்தும் அவர்களின் குடும்பங்கள் குறித்தும் நாடு சிந்திக்கிறது. அவர்களின் தியாகம் வீணாகாது என தெரிவித்தார்.

# அமெரிக்காவில் பயங்கரவாதிகள்



விஜயபாரதம்

அமெரிக்காவில் செயல்படும், காலிஸ்தான் மற்றும் காஷ்மீர் பிரிவினைவாத அமைப்புகள் குறித்து, ஹட்சன் மையம் ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், 'பாரதத்தில், பஞ்சாப் மாநிலத்தை பிரித்து தனி காலிஸ்தான் நாடாக அறிவிக்கக் கோரும் அமைப்புகளும், காஷ்மீர் பிரிவினைவாத குழுக்களும் அமெரிக்காவில் வேகமாக பரவி வருகின்றன. இந்த அமைப்புகளுக்கு, பாகிஸ்தான் உதவிகள் செய்து வருகிறது. கனடா, பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் அதிகமாக வசிக்கின்றனர். அவர்கள் பாரதத்திற்கு எதிராக தீவிர பிரசாரம் செய்து வருகின்றனர். தாங்கள் வாழும் நாடுகளில் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். இது குறித்து பாரதம் பல முறை அமெரிக்காவிடம் புகார் தெரிவித்தும், அமெரிக்க அரசு இதைப்போன்ற பிரிவினைவாத அமைப்புகளை கட்டுப்படுத்த எந்த நடவடிக்கைகலையும் எடுக்கவில்லை. அமெரிக்கா, அவர்களை கட்டுப்படுத்த, முன்னுரிமை அளிக்க வேண்டும். தவறினால், வன்முறைச் சம்பவங்கள் நடப்பதை தடுக்க முடியாது. அமெரிக்க அரசு, காலிஸ்தான், காஷ்மீர் பிரிவினைவாத அமைப்புகளை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். இல்லை எனில், மிகப் பெரிய அளவிலான அசம்பாவிதங்கள், உயிரிழப்புகளைத் தடுக்க முடியாது' என கூறப்பட்டுள்ளது.


# ராகுல் உளறல்



விஜயபாரதம்

மகாத்மா காந்தியுடன் பெண்கள் இருந்தார்கள். ஆனால், ஆர்.எஸ். எஸ் தலைவர் அருகில் பெண்களை பார்த்து இருக்கிறீர்களா? இதில் இருந்தே பா.ஜ.கவும் ஆர்எஸ்எஸ்ஸும் பெண்களுக்கு எதிரானவர்கள் என்று ராகுல் மிகப்பெரிய கண்டுபிடிப்பை நிகழ்த்தி அதனை பெருமையாக மேடைபோட்டு கூறுகிறார். ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் பெண்களுக்கு என தனியாக ராஷ்டிரிய சேவிகா சமிதி என்ற ஒரு தனி அமைப்பே உள்ளது. இதைத்தவிர சேவாபாரதி, பா.ஜ.க, உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளில் பெண்கள் பணியாற்றுகின்றனர். பல பெண்கள் இந்த அமைப்புகள், கட்சி, ஆட்சியில் பெரும் பதவிகளில் உள்ளனர். இதையில்லாம் தெரிந்துகொள்ளாத ராகுல், அதுவும் தற்போது மத்திய அமைச்சராக உள்ள ஸ்மிருதி இரானி என்கிற பெண்ணிடம் போட்டியிட்டு படுதோல்வி அடைந்ததைகூட மறந்து விட்டு வாய்க்கு வந்ததை உளறிக்கொட்டிக்கொண்டு இருக்கிறார்.

# தமிழ்த்தென்றல் திரு.வி.க



விஜயபாரதம்

திருவாரூர் விருத்தாசலம் கலியாணசுந்தரனார் என்ற திரு.வி.க, அரசியல், சமுதாயம், சமயம் எனப் பல துறைகளிலும் ஈடுபாடுகொண்டு பல நூல்களை எழுதிய தமிழறிஞர். சிறந்த மேடைப் பேச்சாளர். இவரது தமிழ்நடையின் காரணமாக இவர் 'தமிழ்த்தென்றல்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார். காஞ்சிபுரம் மாவட்டத்தில் துள்ளம் (தண்டலம்) என்னும் சிற்றூரில் விருத்தாசல முதலியார், சின்னம்மா தம்பதிகளுக்கு ஆறாவது மகனாகப் பிறந்தார்.

கலியாண சுந்தரனாரின் தந்தை ஆசிரியராக திருவாரூரில் பணி செய்த போது கலியாண சுந்தரமும் அங்கேயே வளர்ந்தார். திரு.வி.க தொடக்கத்தில் தம் தந்தையிடம் கல்வி பயின்றார். பின்னர் சென்னை ராயப்பேட்டையில் ஆரியன் தொடக்கப் பள்ளியில் சேர்ந்தார். 1894ல் வெஸ்லி பள்ளியில் நான்காம் வகுப்பில் சேர்ந்தார். அங்கு அவருக்கு ஒரு காலும் ஒரு கையும் முடங்கின. இதனால் பள்ளிப் படிப்பு சிறிது காலம் தடைப்பட்டது. படிப்பில் நல்ல திறமையுடையவர். 1904ல் ஆறாம் படிவத் தேர்வு எழுத முடியாமல் போனது. அத்தோடு அவரது பள்ளிப் படிப்பும் முடிந்தது.

1906ல் ஸ்பென்சர் தொழிலகம் என்ற நிறுவனத்தில் கணக்கராகச் சேர்ந்தார். பாலகங்காதர திலகர் போன்றோரின் விடுதலைக் கிளர்ச்சிகளில் ஈடுபாடு கொண்டதால் அந்த வேலையிலிருந்து விலகினார். 190ல் வெஸ்லியன் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்து பணி புரிந்தார். அப்போது கமலாம்பிகையை திருமணம் செய்தார். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தனர். 1918ற்குள் தம் மனைவி, குழந்தைகளை இழந்து மீண்டும் தனியரானார். ராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தலைமை ஆசிரியராகச் சேர்ந்தார். தேச விடுதலைப் போரில் பங்கேற்பதற்காக அப்பணியில் இருந்து விலகினார்.

பின்னர் தேசபக்தன் என்ற பத்திரிகையில் இரண்டரை ஆண்டுகள் ஆசிரியராகப் பணி புரிந்தார். திராவிடன், நவசக்தி போன்ற பத்திரிகைகளிலும் ஆசிரியராக பணி புரிந்துள்ளார். சென்னையில் உள்ள பல நிறுவனங்களில் தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தொழிலாளர்களின் உரிமைக்கும், முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார். சிறந்த மேடைப் பேச்சாளரான இவர் அரசியல், சமுதாயம், சமயம் எனப் பல துறைகளிலும் ஈடுபாடுகொண்டு பல நூல்களை எழுதினார். தமிழ் தென்றல் என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட திரு. வி. கல்யானசுந்தரம் 1952 செப்டம்பர் 17ல் தனது எழுபத்தோராம் வயதில் காலமானார்.

# லால்குடி ஜெயராமன்



விஜயபாரதம்

லால்குடி ஜெயராமன் திருச்சி மாவட்டம் லால்குடியில் செப்டம்பர் 17, 1930ல் பிறந்தவர். தமிழகத்தை சேர்ந்த கர்நாடக இசை அறிஞர் இவர். வயலின் கலைஞர், கவிஞர், இசையமைப்பாளர், பாடகர், இசை ஆசிரியர் என பன்முகத் திறமை கொண்டவர். கர்நாடக இசைப் பயிற்சியை தனது தந்தை வீ. ஆர். கோபால ஐயரிடமிருந்து பெற்றார். லால்குடி ஜெயராமன் தனது 12 வது வயதில் ஒரு பக்க வாத்தியக்காரராக தனது இசைப் பயணத்தை தொடங்கினார். அவர் பல இசை மேதைகளுக்கு பக்கவாத்தியம் வாசித்தும், தனியாகவும் சுமார் 70 ஆண்டுகள் இசை உலகில் பிரகாசித்து வந்தார். வயலின் வாசிப்பில் 'லால்குடி பாணி' எனும் முறையை ஏற்படுத்தினார். அவரது வயலின் வாசிப்பு பாடுவது போலவே இருக்கும் என்று இசை விமர்சகர்கள் கூறுவார்கள். அனைத்துவித இசைக்கருவிகளின் தனித் தன்மைகளையும் நன்கு உணர்ந்திருந்தார்.

தனது 70 ஆண்டு கால இசை வாழ்க்கையில் ஒரு வயலின் கலைஞராக மட்டுமல்லாமல் ஒரு சிறந்த இசையமைப்பாளராகவும் திகழ்ந்த அவர் பல வர்ணங்கள், பாடல்கள், தில்லானாக்களை இயற்றியுள்ளார். தனி வாசிப்பு, பக்கவாத்தியம் என்பதற்கு அப்பாற்பட்டு வயலின், வீணை, புல்லங்குழல் ஆகிய வாத்தியங்களை ஒரே நேரத்தில் வாசிக்கும் வீனா – வேணு வயலின் எனும் ஒரு புதிய கச்சேரி வகையையும் அவர் அறிமுகப்படுத்தினார்.

எடின்பரோ நகரில் நடைபெற்ற ஓர் இசை விழாவில் லால்குடி ஜெயராமன் வயலின் வாசிப்பை மிகவும் வியந்து புகழ்ந்த பிரபல மேற்கத்திய வயலின் கலைஞர் யஹூதி மெனுயின் தனது இத்தாலிய வயலினை அவருக்கு அன்பளிப்பாக வழங்கினார். லால்குடியின் பிரபலமான தில்லானாக்களுக்கு முன்னணி நடன கலைஞர்கள் பலரும் முத்திரை பதிக்கும் அபிநயங்களை விரும்பி வழங்கி நடனக் கச்சேரிகள் செய்துள்ளனர். நாகஸ்வர இசைக் கலைஞர்கள் பலரும்கூட லால்குடியின் தில்லானாக்களை விரும்பி இசைத்துள்ளனர். லால்குடி ஜெயராமனை ‘தில்லானா சக்ரவர்த்தி’ என்றும் அழைத்தனர்.

பாரத அரசின் பத்மவிபூஷன் விருது உட்பட பல உயரிய விருதுகளையும் கௌரவ டாக்டர் பட்டங்களையும் அவர் பெற்றுள்ளார். லால்குடி ஜெயராமன் இசை அமைத்த ஒரே தமிழ்த் திரைப்படமான சிருங்காரம் படத்திற்கு தேசிய விருது பெற்றார்.



## பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கு பிறந்த நாள் வாழ்த்துகள்